**சார்பு நீதிமன்றம், பரமத்தி**

முன்னிலை : திரு. எஸ்.நளினகுமார், பி.ஏ.பி.எல்.,
சார்பு நீதிபதி, பரமத்தி.

2024–ம் ஆண்டு செப்டம்பர் மாதம் 10–ஆம் நாள் செவ்வாய்கிழமை

**ஐ.எ.எண். 05/2024 இன் அசல் வழக்கு எண். 113/2022**

ரேவதி ... மனுதாரர்/2–ம் பிரதிவாதி

/எதிர்/

1. செல்வராஜ் (வாதி)

2. ராமாயி

3. மைனர். தரனிஷ்

4. மைனர். கிரிதிக்தேவ்

(மைனர். 3, 4–மனுதாரர்களுக்காக இந்நீதிமன்ற
வழக்கறிஞரும், காப்பாளருமான மானஸா) ... 1, 3, 4 பிரதிவாதிகள்/வாதி/
எதிர்மனுதாரர்கள்

இம்மனுவானது, 03.09.2024–ஆம் தேதியன்று என் முன்னர் இறுதியான விசாரணைக்கு வந்த போது மனுதாரர்/2–ம் பிரதிவாதி தரப்பில் வழக்கறிஞர் திரு.என்.முத்துகுமார் அவர்கள் ஆஜராகியும், எதிர்மனுதாரர்/வாதி தரப்பில் வழக்கறிஞர் திரு.பி.குமரேசன் அவர்கள் ஆஜராகியும், 2–ம் எதிர்மனுதாரர் அசல் வழக்கில் தோன்றா தரப்பினராக இருந்து வந்தும், 3, 4–எதிர்மனுதாரர்கள் எக்ஸ்பார்ட்டி செய்யப்பட்டும், இரு தரப்பு வாதங்களை கேட்டும், ஆவணங்களை பரிசீலனை செய்தும், இது நாள் வரையில் இந்நீதிமன்ற பரிசீலனையில் இருந்து இன்று இந்நீதிமன்றம் வழங்கும்....

**உத்தரவு**

இம்மனுவானது, மைனர் குழந்தைகளின் காவலில் இருந்து நீதிமன்ற காவலரை நீக்குவதற்கான உத்தரவை பிறப்பித்து, மனுதாரரை, மைனர் குழந்தைகளின் இயற்கைப்பாதுகாவலர் என்ற முறையில் வழக்குத் தொடர அனுமதிக்கவேண்டி, சி.பி.சி.பிரிவு 151–ன் கீழ் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

2. <u>மனுவின் சுருக்கம்,</u>

மனுதாரர் அசல் வழக்கில் 2–ம் பிரதிவாதியாவார். 2–ம் பிரதிவாதி, மனுதாரரின் மாமியார் ஆவார். அசல் வழக்கானது, எதிர்மனுதாரர்/வாதியால், பிரதிவாதிகள் பெயரில் தொகையை பெறும் வகையில் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. 3, 4–மைனர். பிரதிவாதிகள் மனுதாரரின் குழந்தைகள் ஆவார்கள். மனுதாரர் வழக்கு தாக்கல் செய்யும்போது, அவரது மைனர் குழந்தைகளுக்காகவும் வக்காலத்து தாக்கல் செய்திருந்தார். வழக்கு நிலுவையில் இருந்தபோது, மனுதாரருக்கு உடல்நிலை சரியில்லாததால் அவரால், எதிருரை தாக்கல் செய்ய இயலவில்லை. அதனால், மனுதாரருக்கு எதிராக ஒருதலைபட்ச உத்தரவு பிறப்பிக்கப்பட்டது. மைனர் குழந்தைகளுக்கு நீதிமன்ற காப்பாளர் நியமிக்கப்பட்டார். நீதிமன்ற காப்பாளர் மைனர். குழந்தைகளுக்காக எதிருரை தாக்கல் செய்துள்ளார். மனுதாரர் தாக்கல் செய்த Set aside மனுவும் அனுமதிக்கப்பட்டது. தற்போது, அசல் வழக்கானது, 25.03.2024–ம் தேதி, மனுதாரர் தரப்பு குறுக்கு விசாரணைக்காக வாய்தா போடப்பட்டுள்ளது. அசல் வழக்கில் மனுதாரர், அவரது மைனர். குழந்தைகளுக்காக இயற்கை காப்பாளர் என்ற முறையில் அவரை நியமிக்கவேண்டியது அவசியமாகிறது. எனவே, மைனர் குழந்தைகளின் காவலில் இருந்து நீதிமன்ற காவலரை நீக்குவதற்கான உத்தரவை பிறப்பித்து, மனுதாரரை, மைனர். குழந்தைகளின் இயற்கை காப்பாளர் என்ற முறையில் வழக்கை நடத்த அனுமதிக்கவேண்டி, மனுதாரர் இம்மனுவினை தாக்கல் செய்துள்ளார்.

3. <u>1–ம் எதிர்மனுதாரரின் எதிருரையின் சுருக்கம்</u>

மனு சுத்தப்பொய்யும், மோசடியுமாகும். சட்டப்படியும், நியாயப்படியும் நிலைக்கத் தக்கதல்ல. உடனே தள்ளுபடியாகத்தக்கது. இந்த எதிர்மனுதாரர் வெளிப்படையாக ஒப்புக்கொள்ளும் சங்கதிகளை இதர சங்கதிகளை மனுதாரரே நிரூபிக்க வேண்டும். மனுச்சங்கதிகள் மறுக்கப்படுகின்றன. மேற்படி தாவரவில் மனுதாரர், அவருக்காகவும் 3. 4 மைனர் பிரதிவாதிகளுக்காகவும் வக்காலத்து தாக்கல் செய்யப்பட்டிருந்ததில் நீதிமன்றம் எதிர்வழக்குரை தாக்கல் செய்ய பல வாய்தாக்கல் கொடுக்கப்பட்டும் மனுதாரர் எதிர்வழக்குரை தாக்கல் செய்யாததால், மனுதாரர் பெயரில் ஒருதலைபட்ச உத்திரவு பிறப்பிக்கப்பட்டும் 3, 4 மைனர் பிரதிவாதிகளுக்காக நீதிமன்ற காப்பாளர் நியமனம் செய்யப்பட்டார். மேற்படி நீதிமன்ற காப்பாளருக்கு நீதிமன்றம் பிறப்பித்த

உத்திரவுபடி எதிர்மனுதாரர் ரூ.1500/–ம் செலுத்தி உள்ளார். மேற்படி நீதிமன்ற காப்பாளர் எதிர்வழக்குரை தாக்கல் செய்த பின்பு எதிர்மனுதாரர் தரப்பில் சாட்சிகள் விசாரிக்கப்பட்டு முடிக்கப்பட்டு, நீதிமன்ற காப்பாளரின் தரப்பு சாட்சிக்காக வாய்தா போடப்பட்டிருந்த நிலையில், மனுதாரர் அவர்தரப்பில் ஏற்பட்ட ஒருதலைபட்சமான உத்திரவை ரத்து செய்ய வேண்டி மனு தாக்கல் செய்துள்ளார். மேற்படி மனு ரத்து செய்யப்பட்ட பின்பும், எதிர்மனுதாரர் தரப்பில் சாட்சிக்காக வாய்தா போடப்பட்டிருந்ததில் எதிர்மனுதாரர் தரப்பில் புரூப் அபிடவிட் தாக்கல் செய்யப்பட்ட நிலையில் தான் மனுதாரர் இம்மனுவினை தாக்கல் செய்துள்ளார். மனுதாரர் தாக்கல் செய்த LA.No.4/2023–மனுவில் மைனர் குழந்தைகள் தங்களுடன் இருப்பதாகவும் மேற்படியார்களை பராமரித்து வருவதாகவும் அபிடவிட்டில் எவ்வித விவரங்களும் கூறப்படவில்லை. மனுதாரர் தாவாவின் பலனை, எதிர்மனுதாரர் அடைய கூடாது என்பதற்காக ஒவ்வொரு நிலையிலும் மனு தாக்கல் செய்து வருகிறார். அதனால் மனுதாரரின் மனு தள்ளுபடி செய்யப்படவேண்டியதாகும். எனவே, இம்மனுவை எதிர்மனுதாரரின் செலவுத்தொகையுடன் தள்ளுபடி செய்ய வேண்டுமென்றும் ஆட்சேபனை தாக்கல் செய்யப் பட்டுள்ளது.

4. இம்மனுவில் மனுதாரர் மற்றும் எதிர்மனுதாரர்கள் தரப்பில் சாட்சிகள், சான்றாவணங்கள் எதுவும் முன்னிடவில்லை.

5. தற்போது இந்த மனுவில் தீர்மானிக்க வேண்டியது, மனுதாரர் கூறியுள்ள காரணங்களை ஏற்று, இந்த மனுவானது அனுமதிக்கக்கூடியதா என்பதாகும்.

6. <u>தீர்வு</u>

அசல் வழக்கில் 3, 4–எதிர்மனுதாரர்களுக்கு இந்நீதிமன்றம் நியமித்த நீதிமன்ற காப்பாளரை நீக்கி, மனுதாரரை 3, 4–எதிர்மனுதாரர்களின் காப்பாளராக நியமிக்க வேண்டும் என்று கோரி, இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

7. இரு தரப்பு வாதங்களும், ஆவணங்களும் பரிசீலிக்கப்பட்டது.

8. மனுதாரர் அசல் வழக்கில் 2–ம் பிரதிவாதி. இம்மனுவின் 1–ம் எதிர்மனுதாரர் அசல் வழக்கில் வாதி. இம்மனுவின் 2–முதல் 4–வரையான எதிர்மனுதாரர்கள் அசல் வழக்கில் பிரதிவாதிகள். அசல் வழக்கு புரோநோட்டின்பேரில் சீனிவாசன் என்பவர் பெற்ற கடனை அவரின் வாரிசுகள் என்ற முறையில், மனுதாரரும், 2–முதல் 4–

எதிர்மனுதாரர்களும் செலுத்தவேண்டும் என்று கோரி, 1–ம் எதிர்மனுதாரரால் தாக்கல் செய்யப்பட்டு, நிலுவையில் உள்ளது. அசல் வழக்கு தாக்கல் செய்யும்போது, இம்மனுவின் 3, 4–மைனர். எதிர்மனுதாரர்களின் காப்பாளராக இம்மனுவின் மனுதாரரை நியமிக்க வேண்டும் என்று கோரி தாக்கல் செய்யப்பட்டுள்ளது. பின்னர், அசல் வழக்கின் அழைப்பாணை பெற்ற மனுதாரர் 3, 4–எதிர்மனுதாரர்களுக்காகவும், தனக்காகவும் வழக்கறிஞர் மூலம் ஆஜராகியுள்ளார். பின்னர், அவர்கள் தரப்பில் எதிர்வழக்குரை தாக்கல் செய்யாததால் மனுதாரருக்கு எதிராக ஒருதலைபட்ச உத்தரவு பிறப்பிக்கப்பட்டும், பின்னர், மனுவின்பேரில், 3, 4–மைனர். எதிர்மனுதாரர்களுக்காக இந்நீதிமன்றம் வழக்கறிஞரை நீதிமன்ற காப்பாளராக நியமித்து, உத்தரவு பிறப்பித்துள்ளது. பின்னர், அசல் வழக்கு வா.சா.1–குறுக்கு விசாரணைக்காக வாய்தா இடப்பட்டிருந்த நிலையில், இம்மனுதாரர் அசல் வழக்கில் தனக்கு எதிராக பிறப்பிக்கப்பட்ட ஒருதலைபட்ச உத்தரவை ரத்து செய்யவேண்டும் என்று கூறி, மனுத்தாக்கல் செய்து, அம்மனு அனுமதிக்கப்பட்டு, மனுதாரருக்கு எதிராக அசல் வழக்கில் பிறப்பிக்கப்பட்ட ஒருதலைபட்ச உத்தரவு கடந்த 16.06.2021–தேதியில், ரத்து செய்யப்பட்டுள்ளது. பின்னர், மனுதாரர் இம்மனுவை 3, 4–எதிர்மனுதாரர்களுக்கு நியமிக்கப்பட்ட நீதிமன்ற காப்பாளரை நீக்கி, தன்னை அவர்களின் காப்பாளராக நியமிக்கவேண்டும் என்று கோரி, இம்மனு தாக்கல் செய்துள்ளார்.

9. மனுதாரர் நீதிமன்றத்தில் ஆஜராகாததற்கு காரணமாக அந்த சமயத்தில், மனுதாரருக்கு உடல்நிலை சரியில்லை என்று கூறியுள்ளார். ஆனால், அதை, நிரூபிக்க ஆதாரங்கள் எதுவும் தாக்கல் செய்யவில்லை. எனினும், அசல் வழக்கில் மனுதாரருக்கு எதிராக பிறப்பிக்கப்பட்ட ஒருதலைபட்ச உத்தரவு ஏற்கனவே ரத்து செய்யப்பட்டுள்ளது. 3, 4–எதிர்மனுதாரர்களுக்கு ஏற்கனவே நீதிமன்ற காப்பாளர் நியமிக்கப்பட்டிருந்தாலும், தற்போது அவர்களின் இயற்கை பாதுகாவலரான மனுதாரர் இவ்வழக்கில் ஆஜராகி, தன்னை அவர்களின் காப்பாளராக நியமிக்கக்கோரியுள்ளார். எனவே, 3, 4–எதிர்மனுதாரர்களின் இயற்கை பாதுகாவலரான மனுதாரர் உள்ள நிலையில், நீதிமன்ற காப்பாளர் தேவையில்லை. ஆகவே, இம்மனுவை அனுமதிக்கலாம் என்று இந்நீதிமன்றம் கருதுகிறது. ஆனாலும், அசல் வழக்கில் மனுதாரர் ஆஜராகாததால் அவருக்கு பதிலாக நீதிமன்ற காப்பாளரை நியமிக்கவேண்டி,

1–ம் எதிர்மனுதாரர் மனுத்தாக்கல் செய்து, மனு அனுமதிக்கப்பட்டு, நீதிமன்ற காப்பாளருக்கான ஊதியத்தொகையையும் செலுத்தியுள்ளார். மேலும், மேற்படி மனுதாரரின் நடவடிக்கைகளால், அசல் வழக்கில் காலதாமதம் ஏற்பட்டுள்ளது. ஆகவே, மேற்படி 1–ம் எதிர்மனுதாரருக்கு ஏற்பட்ட செலவுகளையும், அசல் வழக்கு காலதாமதமானதால், அவருக்கு ஏற்பட்ட சிரமத்திற்கும், ஈடாக இம்மனுவை செலவுத்தொகையுடன் அனுமதிக்கலாம் என்று இந்நீதிமன்றம் முடிவு செய்கிறது.

முடிவாக, இம்மனு மனுதாரர்கள் செலவுத்தொகை ரூ.2,000/–த்தை, எதிர்மனுதாரருக்கு 24.09.2024–தேதிக்குள் செலுத்தும் பட்சத்தில் இம்மனு அனுமதிக்கப்படும் என்றும் தவறும்பட்சத்தில் இம்மனு தள்ளுபடி செய்யப்படும் என்றும் உத்தரவிடப்படுகிறது. வாய்தா 24.09.2024.

என்னால் இவ்வுத்தரவு சுருக்கெழுத்தருக்கு நேரடியாக சொல்லப்பட்டு, அவரால் கணினியில் நேரடியாக தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் பிழைநீக்கம் செய்யப்பட்டு 2024–ஆம் ஆண்டு செப்டம்பர் திங்கள் 10–ஆம் நாள் அவையறியத் தீர்ப்பு பகரப்பட்டது.

S NALINAKUMAR

Digitally signed by S NALINAKUMAR
Date: 2024.09.10 16:50:50 +0530

சார்பு நீதிபதி,

பரமத்தி.

<u>மனுதாரர் மற்றும் எதிர்மனுதாரர் தரப்பு சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள்</u>

இல்லை.

S NALINAKUMAR

Digitally signed by S NALINAKUMAR
Date: 2024.09.10 16:50:55 +0530

சார்பு நீதிபதி,

பரமத்தி.